**கொழும்பு மாவட்டத்திலுள்ள 9 கமநல சேவைகள் செயற்குழுகம் - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை செயற்குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்ட பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகள் உள்ளடங்கலாக 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**1.2** கொழும்பு மாவட்டத்திலுள்ள 09 கமநல சேவை செயற்குழுவிற்குரியவாறு வழங்கப்பட்டுள்ள 09 கணக்காய்வு அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த அபிப்பிரயத்திற்கு போதுமான குறைபாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை உள்ளடக்கி கணக்கீட்டு கொள்கைகளுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 21(இ) பந்தியின் பிரகாரம் 05 கமநல சேவை குழுக்களினால் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கான படிவத்தில் அது உள்ளடக்கப்படவில்லை என கஹதுடுவ கமநல சேவை குழுவினாள் தெரியப்படுத்தியுள்ள துடன் ஏனைய குழுக்களினால் எதிர்காலத்தில் நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுவதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 கமநல குழுக்களின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் அனைத்தும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் தொடர்புபடுத்தப்பட்ட சில கணக்கீட்டு கருதுகோள்கள் மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கிட்டு நியமங்கள் அனைத்தும் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பாதுக்கை கமநல சேவை குழு குறிப்பிட்டிருந்ததுடன் ஹோமாகம கமனல சேவை குழுவினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகம மற்றும் மகரகம கமநல சேவை இரண்டுக்கு உரிய 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இருப்பு உண்மைப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம் பல்வேறு இருப்புக்களின் மொத்தம் பெறுமதி ரூபா 1,765,893 ஆக காணப்பட்ட போதிலும் நிதி நிலைமை கூற்றுக்கு அந்தத் இருப்புக்குரிய கூட்டு மொத்தம் ரூபா 2,601,013 ஆக குறிப்பிடப்பட்டதனால் வருட இறுதியின் பெறுமதி ரூபா 835,120 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | ஹோமாகமா கமநல சேவை குழுவுக்குரிய இருப்புக் கிடையில் காணப்பட்ட வேறுபாடான ரூபா 813,820 தொடர்பாக இருப்பு களஞ்சியத்தின் கூரை உடைந்து விழுந்ததனால் களஞ்சியத்தின் கதவு திறக்கப்பட்டு இருப்பு உண்மை தன்மையை காண்பதற்கு முடியாது போனதுடன காலாவதியான இருப்பு காணப்படுதல் மற்றும் வறட்சியான கால நிலைக்கு உள்வாங்கி இருத்தல் மற்றும் வீதி அபிவிருத்தியின் போது நாற்று மேடைகள் உடைத்து நீக்கப்பட்டதன் காரணமாக இறந்து போய்யிருப்பது காரணமாய் இருந்தவுடன் மற்றும் மஹரகம கமநல சேவை குழுவினால் தவறுதலாக இருப்பு பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது. | இருப்பு பெறுமதிகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஹோமாதா கமனல சேவை குழுவுக்குரிய 2015 ஆம் வருடத்துக்கு முன்பிலிருந்து காலாவதியாகிய மொத்தம் ரூபா 417,696 ஆன இருப்பை அடையாளப்படுத்த முடியாத வகையில் அழிவடைந்திருந்த போதிலும் இருப்பு புத்தகங்களில் நீக்கப்படாமல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | புத்தகங்களில் இருந்து நீக்குவதற்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | முறையான அங்கீகாரத்தின் கீழ் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதி கூற்றுகளில் இருப்பு பெறுமதிகள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | கணக்கிட்டு மென்பொருளுக்காக மீளாய்வண்டில் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 194,250 தொகை நிலையான சொத்துக்களாக கணக்கிடப்படாமல் கெஸ்பேவ கமலல வங்கியினால் வருடத்தின் செலவு ஒன்றாக நிதி செயலாற்றல் அறிக்கையில் சீர் செய்யப்பட்டிருந்ததுடன் பாதுக்க மற்றும் கொச்கம கமநல வங்கியினால் அந்தத் தொகை திரண்ட நிதிய மீதிக்கு சீர் செய்யப்பட்டிருந்தது. | 2024 கணக்கறிக்கையின் போது சரியாக சமர்ப்பிக்கப்படும் என்பதாக. | சரியான கணக்கீட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |

**1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| 03 கமநல சேவை குழுக்களின் 18 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களுக்கும் துணை அறிக்கைகளுக்கு மிடையேயான மீதிகளில் மொத்தமாக ரூபா 943,609 ஆன கணக்கிணக்கமின்மை காணப்பட்டது. | விடயங்களை கண்டறிந்து எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | கணக்கிணக்கமின்மைக்குரிய காரணங்களை பரீட்சித்து சரிசெய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.3.4 தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு கமநல சேவை குழு 10 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து முன்கொண்டு வந்திருந்த தொங்கல் கணக்க வரவு மீதி ரூபா 222,621 மற்றும் ரூபா 260,839 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மற்றும் இன்னும் ஒரு கமநல சேவைக் குழு இரண்டு ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டு வந்திருந்த ரூபா 254,065 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேடிப் பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | இந்த தொங்கல் கணக்கு மீதி பல ஆண்டுகளாக காணப்பட்டு வருவதனால் இந்த தொங்கல் கணக்கின் மீதிக்கான காரணத்தை துரிதமாக தேடிப்பார்த்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.3.5 கணக்காய்வுக்காக எழுத்து மூலமாக சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| 9 கமநல சேவை குழுக்களின் ரூபா 29,025,219 நிலையான சொத்துக்கள் காணப்பட்ட போதிலும், அந்த மீதிகளை உறுதிப்படுத்துதவதற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடுகளும், 05 கமநல சேவை குழுக்களின் ரூபா 3,355,408 தொகை கடன் கொடுத்தோர் மீதிகளும் மற்றும் 03 கமநல சேவை குழுக்களின் ரூபா 1,703,293 ஆன கடன் பட்டோர் காணப்பட்டலும், அந்த மீதிகளை உறுதிப்படுத்துதவதற்காக மீதி உறுதிப்படுத்துதல் மற்றும் காலப்பகுப்பாய்வுகளும், ஒரு கமநல சேவை குழுவின் கூற்று மொத்தம் ரூபா 1,105,978 க்குரிய நிலையான வைப்பு, கடையறை வாடகை, பிணை | எதிர்வரும் கணக்கறிக்கை தயாரிக்கும் போது உரிய விபரமான பதிவேடுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதியை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வைப்பு மற்றும் கடன் விற்பனைகள் தொடர்பான உரிய பதிவேடு சான்றுகள் இல்லாததன் காரணமாக அந்த விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக உண்மைப்படுத்துவதற்கு/ சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**1.4 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் ருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(உ) ஆம் உப பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படுகின்ற வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வுக் குழுக்களும் பதில் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஹோமாகம மற்றும் மாலபே கமநல சேவை குழுக்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் வரைபு அறிக்கைக்கான பதிலை வழங்கியிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பதிலை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | **2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டம்** | | | |
| (i) | 14 ஆம் பிரிவு | தகவல்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாமையால் குத்தகைக்கு விவசாயம் செய்பவர்களால் காணி உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைப் பணமாக முன்னைய ஆண்டுகளின் போது கொஸ்கம, கஹதுடுவ மற்றும் மஹரகம ஆகிய கமநல சேவை குழுக்களுக்கு கிடைத்த முறையே ரூபா 11,462, ரூபா 291,939 மற்றும் ரூபா 9,642 தொகைகளை அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொஸ்கம கமநல சேவை குழுவினால் கமநல அபிவிருத்தி ஆணையாளரின் ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ள தென தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் நீதிமன்ற வழக்கு பூர்த்தியடையும் வரை தீர்த்துவைக்க முடியாது என மஹரகம கமநல சேவை குழுக்களினால் அது தொடர்பாக இடம்பெற்ற வழக்கின் போது வழக்குத் தீர்ப்பு தற்போது மத்திய நிலையத்திற்கு | கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கிடைக்கப்பெற்றிருப்பதுடன் எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் என்பதாக. | |
| (ii) | 53(4)(அ) ஆம் பிரிவு | 09 கமனல சேவைகள் குழுக்களின் காணிகள் பதிவேடு 03 வருடங்களுக்கு ஒரு முறை ஆணையாளர் நாயகத்தினால் பரிச்சிக்கப்பட்டு சான்றுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அனைத்து கமநல சேவை குழுக்களினதும் இணக்கப்பாடு தெறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | |
| (i) | நி.பி 134 (3) | கொழும்பு மாவட்டத்திலுள்ள ஏழு கமநல சேவைக் குழுக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களின் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளகக் கணக்காய்வுப் பரீட்சிப்புக்களின் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | நி.பி 757 (2) (அ) | பொருள் மீளாய்வுச் சபையின் அறிக்கை கிடைத்தன் பின்னர் அதன் பிரதி உடனடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்காக 08 கமநல சேவைக குழுக்களின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | (ii) | -மேற்படி- |
| (iii) | நி.பி 880 மற்றும் 881 | 02 கமநல சேவை குழுக்களின் பொருட்கள் மற்றும் பணத்திற்கு பொறுப்பாக செயற்படுகின்ற காசேலையில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்களால் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைகள் வைக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்களால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிணைகள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்டும் என. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 2023 ஆம் ஆண்டிற்காக 07 கமநல சேவை குழுக்களின் மொத்தமாக ரூபா 5,809,294 மிகையும், 02 கமநல சேவை குழுக்களின் மொத்தமாக ரூபா 784,396 பற்றாக்குறையுமாக கூட்டு மொத்தமாக ரூபா 5,024,898 மிகை மற்றும் 09 கமநல வங்கிகளின் மொத்தமாக ரூபா 4,352,487 மிகையும் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் 09 கமநல சேவை குழுக்களின் மொத்தமாக ரூபா 7,095,770 மிகையும் 09 கமநல வங்கிகளின் மொத்தமாக ரூபா 2,614,123 மிகையும் காணப்பட்டது.

#### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

(அ) மீளாய்வாண்டில் 07 கமநல சேவைகள் குழுக்களின் கூட்டு மொத்தம் ரூபா 5,809,294 மிகையாகவும் 02 கமநல சேவைகள் குழுக்களின் கூட்டு மொத்தம் ரூபா 784,396 பற்றாக்குறை ஒன்றாக கூட்டு மொத்தம ரூபா 5,024,898 மிகை ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துடன் அதற்கு நேரத்த முன்னைய வருடத்தின் 09 கமநல சேவைகள் குழுக்களின் மிகை ரூபா 7,095,770 ஆகும். அதன் பிரகாரம், மிகையின் ரூபா 2,070,877 குறையொன்று காணப்பட்டது. இந்த குறைக்கு மஹரகம, ஹோமாகம மற்றும் ஜெயவர்த்தனபுர கோட்டை கமநல சேவைகள் குழுவின் மிகை முன்னேய வருடத்தை விட குறைந்திருத்தல் மற்றும் கொலன்னாவ மற்றும் கஹதுடுவ கமநல சேவைகள் குழுக்களின் பற்றாக்குறை பிரதானமான காரணமாக இருந்தது.

(ஆ) கமநல சேவைக் குழுக்களின் தொடக்க செயற்பாடாக பசளை, விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகளும் நாற்றுக்களும், விவசாய உபகரணங்கள் என்பவைகளை உள்ளடக்கிய விவசாய கைத்தொழில் பொருட்களை விற்பனை செய்வதுடன் மீளாய்வாண்டிற்கு 09 கமநல சேவை குழுக்களின் முழு விற்பனையின் மொத்த தொகை ரூபா 29,300,673 மற்றும் முழுமையான மொத்த இலாபத்தின் மொத்த தொகை ரூபா 2,282,878ஆக இருந்ததனால் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் 09 கமநல சேவை குழுக்களின் முழு விற்பனையின் மொத்த தொகை ரூபா 35,678,090 மற்றும் முழுமையான மொத்த இலாபத்தின் மொத்த தொகை ரூபா 3,059,825 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டினை விட முழு விற்பனையின் ரூபா 6,377,417 மற்றும் மொத்த இலாபத்தின் தொகை ரூபா 776,947 வினால் குறைந்திருப்பது காணக்கூடியதாக இருந்தது.

(இ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 கமநல சேவை குழுக்களின் நிதி நிலைமை தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **<u>நிதிச் சொத்துக்கள்</u>** | **ரூபா** |
|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 55,541,829 |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 48,239,373 |
| **<u>முழுப் பொறுப்புக்கள்</u>** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள | 41,029,732 |
| நீண்டகால கடன் பெறுமதி | 9,515,828 |
| திரண்ட நிதியின் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | 53,235,642 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வைப்புக் கணக்குகள் செயற்படுத்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவை குழுக்களிடம் காணப்பட்ட 04 நடைமுறைக் கணக்குகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் | பாதுக்க கமநல சேவை குழுவினால் அதன் மீதி சேமிப்பு கணக்கிற்கு செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் | செயற்பாடற்ற வங்கிக் கணக்கினை இன்னும் பேணுவதற்கான தேவைப்பாடு இல்லையாயின் |

| | | | |
|---|---|---|---|
| | அக்கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 541,682 மீதி காணப்பட்டது. | நடவடிக்கை மேற்கொள்வதாக மற்றும் ஏனைய கமநல சேவை குழுவின் குழுவினால் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அக்கணக்குகளை முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 9 கமநல சேவை குழுக்களிடம் எந்த வட்டி வருமானமும் கிடைக்காத நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மீதி ரூபா 14,258,343 ஆகும். | பதில் வழங்கப்படவில்லை. | முறையான அங்கீகாரத்துடன் நிதியத்தை மிகவும் வினைத்திறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | 9 கமநல சேவை குழுக்களுக்குரிய கூட்டு மொத்த ரூபா 29,725,656 பணம் குறைந்த வட்டி வருமானம் கிடைக்கின்ற சேமிப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது | பதில் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளகக் கணக்காய்வொன்றின் மூலம் இனங்காணப்பட்டுள்ள கொஸ்கம கமநல வங்கியின் கமத்தொழில் ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரினால் மேற்கொள்ளப்பட்டது என அறிக்கையிடப்பட்ட ரூபா 483,664 நிதி மோசடி தொடர்பாக அந்த உத்தியோகத்தரிடமிருந்து மேற்கூறிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இந்த நிதி மோசடி வெளிப்படுத்தப்பட்டு 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உத்தியோகத்தருக்கு எதிராக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை இன் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29.4 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் பணத்தை அறவீடு செய்ததன் பின்னர் கணக்கறிக்கைகள் சரிசெய்யப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்டுள்ள நிதி மோசடி சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கோட்டே கமநல சேவை குழுவிக்குரியவாரு மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 764,838 தொகையான இருப்பு பற்றாக்குறையில் ரூபா 81,623 தொகை பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருந்தும், மிகுதி இருப்பு | இருப்பு பற்றாக்குறை தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்றின் மூலம் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை வெளிப்படுத்தி இருக்கவில்லை என்பதால் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக தேவையான ஆலோசனைகளை வேண்டி | இனங்காணப்பட்டுள்ள நிதி மோசடி சம்பந்தமாக முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பற்றாக்குறையான ரூபா 683,215 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கமநல வங்கியில் இடம்பெற்றுள்ள ரூபா 564,741 நிதி மோசடி சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத துடன், ரூபா 444,741 ஆன அப்பண மோசடியின் பெறுமதி மாத்திரம் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | நிற்பதாக. | |
| (இ) | 03 கமனல சேவை குழுக்களின் விதைகள், விவசாய இரசாயனங்கள், உரம் மற்றும் நாற்றுக்களுக்குரிய ரூபா 274,888, 04 கமநல சேவை குழுக்களின் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக கிடைக்கப்பெற்றிருந்த கனிம திரவ உரம் 2993 லீட்டர் மற்றும் உயிரியல் திரவ உரம் 457 லீட்டர் காலாவதியாகி பாவனைக்கு எடுக்க முடியாது இருந்தது. | பதிவளிப்பதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக. | குழுவுக்குரிய விற்பனை பொருட்கள் மற்றும் உரம் என்பவற்றை முறையான வேலை திட்டத்தின் கீழ் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1977 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோட்டே கமநல சேவை நிலையம் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் நிலத்தின் உரிமை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கஹதுடுவ கமநல சேவை நிலையத்திற்குரிய காணி தற்காலிகமாக பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைப்பப்பட்டிருந்ததுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினர்களுக்கிடையே கடிதங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தும் அக்காணி கஹதுடுவ கமநல சேவை நிலையத்திற்கு மீள உரித்தாக்கப்பட்டிருக்காததுடன், கஹதுடுவ கமநல நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக கஹதுடுவ கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானமாக பயன்படுத்துகின்ற காணியில் 30 பேச்சர்ஸ் இனை பயன்படுத்தும் உரிமை கஹதுடுவ கமநல சேவை குழுவின் நிறைவேற்று | கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை என. | நிலையத்திற்குச் சொந்தமான காணியை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அக்காணி உரித்தாக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், ஹோமாகம, கொஸ்கம, மஹரகம, கொலன்னாவை மற்றும் பாதுக்கை கமநல சேவை குழுக்கள் அமைந்துள்ள காணிகள், உரித்தாக்குவதற்கும் மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கொவி செவனவிற்காக பாதுக்கை கமநல சேவை குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த 82 பர்ச்செஸ் "தபோர" இடத்தை ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைக்கு ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதியிலும் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | முறையான வகையில் ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | கெஸ்பேவ கமநல சேவை நிலையத்திற்கச் சொந்தமாக 11 விற்பனை கடைகள் தொடர்பாக குத்தகைதாரர்களுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கை 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது முடிவடைந்திருந்தும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் போட்டித் தன்மையினான விலை மனு கூறப்பட்டு விற்பனை நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் 2021 ஆம் வருடத்தில் சபை அங்கீகரித்த புதிய வாடகை பணத்தின் கீழ் ஒப்பந்தத்திற்கு முனைப்படாமல் 2024 ஜுன் 03 ஆம் திகதியாகியும் விற்பனை நிலையங்களை நடத்திச் செல்வதற்கு பழைய ஒப்பந்ததாரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. | சில விவசாய அமைப்புகள் தற்போதும் புதிய ஒப்பந்தத்திற்கு முனைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதுடன் மற்றும் அனைத்து விவசாய அமைப்புக்களுடனும் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அதிகரிக்கப்பட்ட குத்தகை வாடகை தொடர்பாக மேன்முறையீடொன்று, கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக தீர்வு ஒண்டு கிடைக்கும் வரை 2024 ஆம் வருடத்திற்குரிய வாடகை ஜனவரி மாதத்தில் இருந்து செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன் தற்போது 2024 ஆம் வருடத்திற்குரிய வாடகை முறையாக செலுத்தப்படுவதாக. | திறந்த போட்டித் தன்மையிலான பெறுகைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, குழுவின் வருமான உழைப்பினை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | டெண்டர் கோருதல் மேற்கொள்ளப்படாமை, குத்தகை காலத்தை முறையற்ற வகையில் நீடித்தல் மற்றும் முறையான மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை கட்டணத்தை தீர்மானிக்காமல் கொஸ்கம கமநல | குழு தீர்மானம் ஒன்றின் அடிப்படையில் அந்த காணி குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதுடன் மற்றும் எதிர்காலத்தில் | முறையான வகையில் மதிப்பீட்டை மேற்கொண்டு டெண்டர் கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படுதலின் ஊடாக குழுவின் வருமான |

| | | | |
|---|---|---|---|
| | சேவை மத்திய நிலையத்துக்குரிய 1 ஏக்கர் காணி அளவு காணப்படுகின்ற ‘‘பொரலுகொட சாலாவ வத்தை’’ என்ற பெயருடைய காணி ஒப்பந்த பத்திரமொன்றின் மூலம் மாதாந்தம் குத்தகை கட்டணம் ஒன்றின் கீழ் விவசாய அமைப்பிற்கு 2009 ஆகஸ்ட் 20 ஆம் திகதியிலிருந்து மீளாய்வாண்டு வரை வழங்கப்பட்டிருந்தது. | குழுவை தெரியப்படுத்தி டெண்டர் கோரப்படுதல் மேற்கொள்ளப்படும் என்பதாக. | ஈட்டுதலை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 02 கமநல சேவை குழுக்களின் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக முறையே ரூபா 97,243 , ரூபா 343,600 மற்றும் ரூபா 114,163 செலவு செய்யப்பட்டிருந்தும் வீட்டுத் தோட்ட வருமானம் முறையே ரூபா 12,953 , ரூபா 26,725 மற்றும் ரூபா 24,250 மாத்திரமாக இருந்ததுடன் ஹோமாகம கமநல சேவை குழுவினால் 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்காக வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 8,160 , ரூபா 21,150 மற்றும் ரூபா 7,370 செலவு செய்யப்பட்டிருந்தும் எந்த வீட்டுத் தோட்ட வருமானமும் சேகரிக்கப்படாமையின் அடிப்படையில் வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுக்கு நேரொத்ததாக வீட்டுத் தோட்ட வருமானம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | மாலபே கமநல சேவை குழுவினால் வீட்டுத் தோட்ட அலங்கார வேலை திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டதாக கெஸபேவ கமநல சேவை குழுவினால் செலவு மேற்கொள்ளப்பட்டிருப்பது, மாதிரி விட்டுத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு என்பதனால் அந்த செலவுக்கு இணையாக வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியாது போய் உள்ளதாக. ஹோமாகம கமநல சேவை குழுவினால் தற்போது மத்திய நிலையத்தில் களஞ்சிய சாலை கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் மற்றும் மத்திய நிலையத்தில் மேலும் வேறுபாடுகளை மேற்கொள்வதற்கு உள்ளதாக உள்ளதாகவும் வீட்டுத்தோட்டத்தினுள் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கை ஒன்று அல்லது வருமானங்களை பெற்றுக் கொள்ள முடியுமான பயிரிடுதல் ஒன்றை மேற்கொள்வதற்கு முடியாது உள்ளதாக. | செலவுகளுக்கு சமனான பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முறையான திட்டத்தின் அடிப்படையில் செலவு செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |
| (ஊ) | பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படுகின்ற 08 கமநல சேவைக் குழுக்களின் ரூபா 4,540,841 தொகையான பெறவேண்டிய 130 மீதிகளை அறவீடு செய்வதற்கும் ரூபா 5,624,730 தொகையான செலுத்த வேண்டிய 73 மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய மீதிகளை புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக. | பெறவேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை திர்த்துவைப்பதற்கு அல்லது முறையான அங்கீகாரத்தினைப் பெற்று திரண்ட நிதியத்தில் செம்மையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஹோமாகம கமநல சேவை மத்திய நிலையத்தின் கட்டிடம் மற்றும் காணிக்காக 2020 மார்ச் 06ஆம் தேதி கிடைக்கப்பெற்ற ரூபா 3,917,967 ஆன இழப்பீட்டுத் தொகை குழுவின் நடைமுறை கணக்கினுள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. 2024 ஜுன் மாதமளவிலும் அந்த இழப்பீடுத் தொகை கிடைக்கப்பெற்று 04 வருடங்களை விஞ்சி இருந்த போதும் இழப்பீட்டுத் தொகை தரப்பட்ட காரணத்திற்காக ஈடுபடுத்துவதற்கு அல்லது அந்த தொகையை நிலையான வைப்பில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறிவுரை கிடைக்கும் வரை குழுவின் கணக்கில் தடுத்து வைப்பதற்கு வாய் மூலமான அறிவுரை கிடைக்கப்பெற்றதுடன் பொறுப்பு என்ற வகையில் கணக்கிடப்பட்டுள்ளதுடன் மற்றும் தற்போது உர களஞ்சியம் ஒன்று நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக ஈடுபடுத்துவதற்கு நிதியத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதில் தாமதம் ஒன்று ஏற்படுமாயின் முறையான அங்கீகாரத்தின் கீழ் பொருத்தமான முதலீட்டு மூலம் ஒன்றில் முதலிடப்பட வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 கமல சேவை குழுக்களுக்குரிய 2023 வருடத்தின் பெரும் போகத்தில் நெல் பயிரிடக் கூடிய வயற்கனிகளின் அளவு 12,173 ஏக்கர் ஆக காணப்பட்டதுடன் பயிரிடப்பட்ட வயற்க்கானிகளின் அளவு 9,057 ஏக்கர் ஆகும். தரிசாக உள்ள வயற்க்கானிகளில் பயிரிடக்கூடிய வயிற்றானிகளின் அளவு 2,128 ஏக்கர் ஆக காணப்படுவதுடன் அதில் நெல் பயிரிடப்பட்டுள்ள வயக் காணிகளின் அளவு 192 ஏக்கர் ஆகும். அதன் பிரகாரம் ஒட்டுமொத்தமாக நெல் பயிரிடக்கூடிய வயிற்றானிகளில் அளவுகளில் இருந்து 5,052 ஏக்கர் பயிரிடப்படாமல் இருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நெல் பயிரிட முடியுமான காணிகளின் அளவுகளில நெல் பயிரிடுதலுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தரிசு வயக்காணிகளில் மீண்டும் பயிரிடும் வேலை திட்டம் - 2023 இன் கீழ் 03 கமநல சேவை குழுக்கள் அந்த குழுக்களுக்கு உரித்தான அதிகாரப் பிரதேசத்தினுள் தரிசு வயல் 57.86 ஏக்கர் மீண்டும் பயிரிடுவதற்காக ரூபா 2,348,316 ஏற்பாடு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 39.5 ஏக்கருக்காக ரூபா 1,730,743 மாத்திரம் பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | அதிக மழை காரணமாக தரிசு வயக்காணிகள் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்து வதற்கு முடியாது போனதாக. | தரிசு வயக் காணிகளை மீண்டும் பயிரிடும் வேலைத்திட்டத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி அந்த செயல்திட்டத்தின் நோக்கத்தை அடைய பெற்றிருக்க வேண்டும். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாலபே கமநல சேவை குழுவினால் சட்ட விரோதமாக வயல் காணிகள் நிரப்புதளுக்கு எதிராக ஒருவருக்கு 2000 இலக்கம் 46 உடைய கமநல அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் 33 ஆவது பிரிவு மற்றும் 32 ஆவது பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் வழக்கு சமரசமாக நிறைவு செய்வதற்காக ஒரு பர்ச்செசுக்காக ரூபா 20,000 வீதம் 80 பர்ச்செசுக்காக ரூபா 1,600,000 பெற்றுக் கொள்ளப்பட்டு குழுவின் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் கெஸ்பேவ கமநல சேவை குழுவினால் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் நிர்மாண பணி மேற்கொண்டுள்ள வயல் காணிக்கு வயல் காணி ஒன்று அல்ல என்பதாக பத்திரமன்றை பெற்றுக் கொடுப்பதற்காக ஒரு பர்ச்செசுக்காக ரூபா 30,000 வீதம் 18.1 பர்ச்செசுக்காக ரூபா 543,000 பெற்றுக்கொண்டு குழுவின் வருமானம் ஒன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. இவ்வாறு சட்டத்தின் பிரகாரம் பிழையொன்றை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு பதிலாக இந்த வழக்கு நடவடிக்கை சமரசமாக மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | மாலபே கமநல சேவை குழுவினால் வழக்கை சமரசமாக்கிக் கொள்வதற்கு பிரதிவாதியினால் கௌரவ நீதிமன்றத்திடம் கோரப்பட்டு இருந்த கோரிக்கையை கவனத்தில் கொண்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக. கெஸ்பேவ கமநல சேவை குழுவினால் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் உரிய காணியில் நிர்மானமொன்றை மேற்கொண்டிருந்தது காரணமாக விண்ணப்பதாரரை அழைத்து ஏதாவது கொடுப்பனவினை குழுவுக்கு செலுத்துமாறும் அதற்காக பொருத்தமான தொகை ஒன்றை குழுவிற்கு தீர்மானிக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டணத்தை தீர்மானிக்க முடியுமான முறையொன்றுக்காக அறிவுரை வழங்கப்படாதிருந்தலுடன் குழுவினால் உரிய பிரதேச காணியின் பெறுமதியை கவனத்தில் கொண்டு 01 பர்ச்சசுக்காக ரூபா 50,000 வீதமான தொகை ஒன்றை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் பின்னர் கிடைக்கப்பெற்ற அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக.- | கமநல அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்கு இணங்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளின் பின்னர் கொழும்பு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளினால் முன் கொண்டு செல்லாமல் இழப்பீட்டுத் தொகை ஒன்றை பெற்றுக் கொள்ளுதல் பிழையான முன் உதாரணமாக ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.- |

## 3.6 பாவனையற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 05 கமநல சேவை குழுக்களின் 10 உழவு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளப்படாது | இது சம்பந்தமாக மாவட்ட அலுவலகங்களின் | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு முடியாத நிலைமை |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்றுக் காணப்பட்டன. | ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ளன. | காணப்படுமாகவிருந்தால் அச்சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்ய முடியுமாயின் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவை குழுவின் விதை, விவசாய இரசாயனப் பொருட்கள், உரம் மற்றும் பயிர்களுக்குரிய ரூபா 274,888 தொகையும் 04 கமநல சேவை குழுக்களின் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக கிடைத்திருந்த 2993 லீற்றர், சேதன இரசாயன பசளைகளும் மற்றும் 457 லீற்றர் உயிரியல் திரவப் பசளைகளும் காலாவதியாகி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. | பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது. | திரவப் பசளைகளை காலாவதியாவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிப்பதற்கு முடியாது செயலகத்தினூடாக திரவப் பசளைகளை வழங்கும் கம்பனிக்கு மீளத்திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் மாவட்ட அலுவலகத்திற்கு மற்றும் கமநல சேவை மத்திய நிலையங்கள் 09க்கு உரிய அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 453 ஆகவும், உள்ளவாறான பதவியணியினர் 378 ஆகவும் காணப்பட்டதனால் வெற்றிடங்கள் 86 மற்றும் மிகை 14 ஆகும். இருப்பினும், ஒவ்வொரு சேவை மத்திய நிலையத்துக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அவதானிக்கப்படாததனால் ஒவ்வொரு மத்திய நிலையத்துக்கு உரிய வெற்றிடங்கள்/மிகை பதவி அணியினரை அடையாளப்படுத்த முடியாதுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவி அணியினரை திருத்தங்களுக்கு உள்ளாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 09 கமநல சேவை குழுக்கள் தொடர்பாக 311 விவசாய ஆராய்ச்சி மற்றும் கமத்தொழில் உற்பத்தி உதவி பிரிவுகள் உள்ளடங்கியுள்ளதுடன், அவற்றில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் வெற்றிடங்கள் 49 காணப்பட்டன. 09 கமநல சேவை குழுக்களிலும் விவசாய வங்கி உத்தியோகத்தர் மற்றும் விவசாய வங்கி உதவியாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | கோட்டே கமநல சேவை மையத்தின் கீழ் 21 பிரிவுகள் இருந்ததுடன், 21 அங்கீகரிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் இருந்த போதிலும், நெல் பயிரிடக் கூடிய வயல் | பதில் வழங்கப்படவில்லை. | ஒரு பிரிவுக்குள் நடைமுறையிலுள்ள வயல் காணிகள் மற்றும் பிற பயிர் நடவடிக்கைகளைப் பொறுத்து தேவையான |

| | | |
|---|---|---|
| காணிகள் 4 ஏக்கர் 2 ரூட் ஒரு பிரிவுக்கு மட்டுமே உரித்தாவதுடன், கொலன்னாவ கமநல சேவைப் அதிகாரத்துக்குற்பட்ட பிரதேசத்தில் நெல் பயிரிடக் கூடிய வயல் காணிகள் 125 ஏக்கர் வயல்களும் வி.ஆ.உ.உ 17 பிரிவுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளுக்காக 16 வி.ஆ.உ.உதவியாளர்கள் உள்ளதாகவும், இதில் நெல் பயிரிடக் கூடிய வயல் காணிகளில் 108 ஏக்கர் உரித்தாவது 04 வி.ஆ.உ.உ மட்டுமே என்பதும், கெஸ்பேவாவின் கமநல சேவை மையத்திற்குரிய ஒரு வயல் காணியேனும் அல்லது தரிசு நிலங்கள், எதுவும் இல்லாத 06 வி.ஆ.உ.உ பிரிவுகள் மற்றும் பயிரிடுதலுக்காக பயன்படுத்த முடியாத சில தரிசு வயல் காணிகள் காணப்படுகின்ற 03 வி.ஆ.உ.உ பிரிவுகள் காணப்பட்டதுடன், ஒவ்வொரு வி.ஆ.உ.உ பிரிவுக்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, வி.ஆ.உ.உ உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் அதன்படி, நெல் பயிரிட முடியுமான வயல் காணிகள் இல்லாத பிரிவுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள வி.ஆ.உ.உ உத்தியோகத்தர்கள் முறையான கடமைகளில் ஈடுபடவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை திருத்தப்பட அல்லது வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| 2010 மே 04 ஆந் திகதிய 107ஆம் இலக்க (திருத்தம் 2) கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஹோமாகமை கமநல வங்கியின் 2019 ஆம் வருடத்தின் கமநல வங்கி நிதி கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது 45 மாதங்கள் தாமதமாகி 2023 டிசம்பர் 28ஆம் திகதியில் ஆகும். 2020, 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களின் கமநல வங்கி நிதி கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது முறையே 36 மாதங்கள் 24 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் தாமதமாகி 2024 மார்ச் 06ஆம் திகதியிலாகும். | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 கமநல வங்கி

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு கமநல சேவை குழுக்களின் 86 கடனாளிகளுக்கு உரிய ரூபா 751,089 அறவிட்டு கொள்வதற்கு முடியாது காணப்படுவதுடன் அந்த கடன் மீதியினுல் ரூபா 275,476 பெறுமதியான 60 விவசாய கடன் மீதிகள் சமணல வங்கி நிதி மோசடி விசாரணை நடவடிக்கைகளுக்குரிய கடன் மீதிகள் என்பதுடன், அந்த கடனை அறவிட முடியாததன் காரணமாக ரூபா 67,132 பெறுமதியான 08 கடனாளிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் ரூபா 21,314 பெறுமதியான 05 கடனாளிகள் தீர்வு சபைக்கு அனுப்புவதற்கு மாத்திரம் நடவடிக்கைக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதாக கமநல வங்கிக்யொண்டு குறிப்பிட்டுள்ளதுடன் ஏனைய கமநல வங்கிகளினால் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கடனை அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு கமநல வங்கியில் பல ஆண்டுகளாக காணப்பட்டு வரும் சுழற்சி நிதிய கட்டுப்பாட்டுக் கணக்கின் ரூபா 287,171 மற்றும் சுழற்சி வட்டி கட்டுப்பாட்டுக் கணக்கின் ரூபா 689,507 மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடனை அறவீடு செய்ய முடியாததன் காணரமாக 2010 ஆம் ஆண்டின் பின்னர் வட்டியை கணிப்பீடு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளது. | இது சம்பந்தமாக மாவட்ட அலுவலகங்களின் ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ளன. | போதியளவு தகவல்கள் மற்றும் ஆவணங்கள் பேணப்பட வேண்டியதுடன் கடனை வழங்குதல் மற்றும் அறவீடு செய்தல் முறையாக செய்யப்படுதல் வேண்டும். |